செ.வெ.எண்: 24 நாள்: 09.01.2020

**சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்தவர்கள் கல்லறைத் தோட்டம், கபரஸ்தான் அமைத்திட கோரிக்கை மனுக்கள் அளிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்தவர்கள் கல்லறைத் தோட்டம், கபரஸ்தான் அமைத்திட கோரிக்கை மனுக்கள் அளிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வசிக்கும் சிறுபான்மையினர் இனத்தைச் சேர்ந்த கிறித்துவர்களும், இஸ்லாமியர்களும் தேவைகளின் அடிப்படையில் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் முறையே கல்லறைத் தோட்டம், கபரஸ்தான் அமைத்திட கோரிக்கை மனுவினை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**